மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்

அ.வ.எண்.6/2019

வாசா.1

தேதி. 22.10.2019

பெயர் :- முகமது யாக்கோப்

1873ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் 10வது பிரிவின்படி 2019 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் தேதி 22 ஆம் நாள் உதவியாளர் அவர்களால் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:

நான் குடியிருக்கும் வீடு என் தகப்பனாருக்கு பூர்விகமாக பாத்தியப்பட்டது. நான் கடைகள் வாடகைக்கு விட்டுள்ள இடம் நான் கிரையம் வாங்கிய இடம். அந்த கிரையங்களை முறப்பநாடு சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்தேன். அந்த கடைகள் செய்துங்கநல்லூர் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகள் என் மனைவியின் உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். என் அம்மாவும் பிரதிவாதியின் தகப்பனாரும் உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்து ஆரம்பத்தில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் A.C.காதர்முகைதீனுக்கு பாத்தியப்பட்டது. A.C.காதர்முகைதீன் என்பவர் மாமனார். அவருக்கு சொத்து பாத்தியப்பட்டது என்பதற்கு பட்டா உள்ளது. அந்த பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அதன்பின்பு சாட்சி தான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பார்வை செய்துவிட்டு வாசாஆ9 ஆவணத்தை காட்டினார். அந்த ஆவணத்தில் மைதீன் என்று போடப்பட்டுள்ளது, முகைதீன் என்று போடபடவில்லை என்றால் சரிதான். எனவே காதர் முகைதீன் என்பவர் பெயரில் பட்டா தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, முகைதீன், மைதீன் என்பது இரண்டுமே ஒரே பெயர் தான். இரண்டும் ஒரே நபர் தான என்று

பிராதிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. என் தாயாரின் தகப்பனார் பெயர் முகமது அப்தூல்காதர். முகமது அப்தூர்காதருக்கு சாகுல்அமீது என்று சகோதரர் உள்ளார் என்றால் நான் பார்த்தது இல்லை, கேள்விபட்டுள்ளேன். முகமது அப்தூல்காதரை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. நான் 1955ல் பிறந்தேன். முகமது அப்துல் காதருக்கு 5 பிள்ளைகள் காதர் முகைதீன் (பிரதிவாதி தகப்பனார்), முகமது முஸா, ரபியா பீவி, மைதீன் பாத்திமா, ஜமால் பீவி என்றால் சரிதான். ரபியா பீவி மூத்தவர். இந்த 5 பேருகளுக்கிடையே வாய்மொழியாக குடும்ப சொத்துகளை பொறுத்து ஏற்பாடு நடந்தது. பிரதிவாதி பதில் வழக்குரை படித்து பார்த்தேன். வழக்கு சொத்து வீட்டிற்கு மேற்கு பக்கம் சாகுல் அமீதுக்கு பாத்தியப்பட்ட வீடு இருந்தது என்றால் சரிதான். சாகுல்அமீது வீடும், முகமது அப்துல்காதர் வீடும் முன்பு இவர் தகப்பனார் காதர் முகைதீனுக்குபாத்தியப்பட்டது என்றால் தெரியாது. நான் 10 வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ் எழுதபடிக்க தெரியும். 26.1.1930ல் சாகுல் அமீது மற்றும் முகமது அப்துல்காதரும் பிறப்பித்து கொண்ட பாகபிரிவினை பத்திரம் என்னிடம் காட்டப்பட்டது என்றால் நான் பார்த்தது இல்லை. பிரதிவாதி இந்த பத்திரம் பற்றி தனது பதில் அறிவிப்பில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான், நான் நகல் எடுத்து பார்க்கவில்லை. எதிர்வழக்குரையில் இது பற்றி சொல்லியுள்ள போதும் நான் நகல் எடுத்து பார்க்கவில்லை. முகமது அப்துல்காதர் வாரிசுகளுக்கிடையே வாய்மொழி பாகபிரிவினை நடந்ததாக பிராதில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. காதர்முகைதீனிடமிருந்து தொழு கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். அந்த தொழு செய்துங்கநல்லூர் கிராமத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான். அந்த மாட்டுதொழு கிரைய பத்திரம் முரப்பநாடு சார்பதிவாளர்

அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த மாட்டுதொழுவிற்குரிய கிரைய பத்திரம் மூல பத்திரம் என் கைவசம் உள்ளது என்றால் சரிதான். காதர் முகைதீன் பிறந்ததிலிருந்து இறக்கும் வரை வழக்கு சொத்தில் குடியிருந்தார் என்றால் இடையில் எங்கள் பெயரில் பத்திரம் வந்தவுடன் காலி செய்து ஒரு மாதம் வெளியில் இருந்தார் பிறகு இடம் பற்றவில்லை என்று என்னிடம் கேட்டதால் வாடகைக்கு கொடுத்தேன். அவர் காலி செய்து எந்த வீட்டில் இருந்தார் என்றால் அதே புது தெருவில் வேறு வீட்ல் குடியிருந்தார் ஆனால் கதவு எண் ஞாபகம் இல்லை. நான் சொல்வது போல் எங்கள் பெயரில் கிரையம் முடித்தவுடன் அவர் வீட்டை காலி செய்து வேறு வீட்டில் குடியிருந்தார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த விவரத்தை பிராதிலும் அறிவிப்பிலும் சொல்லவில்லை என்றால் சரிதான், அந்த விவரம் தேவை இல்லை என்பதால் சொல்லவில்லை. நான் வாடகைக்கு கொடுத்த விவரம் என் அம்மா, அப்பா, அவர் பிள்ளைகள், என் மனைவி, எங்கள் குடும்பத்தினர் அனைவருக்கும் தெரியும். என் அப்பா, அம்மா இறந்துவிட்டார். அந்த ஊர் மக்கள் அனைவருக்கும் தெரியும். ஊர் மக்கள் யார் என்றால் அமீது, தெரு மக்கள் அனைவருக்கும் தெரியும். நான் காதர் முகைதீனுக்கு வாடகைக்கு கொடுத்த விவரம் யாருக்கு தெரியாது நான் பொய்யாகசொல்கிறேன் என்றால் சரியல்ல. காதர் முகைதீனுக்கு எந்த தேதியில் வாடகை ஒப்பந்தம் பேசப்பட்டது என்றால் தேதி சரியாக ஞாபகம் இல்லை 8 வது மாதம் 1993ல். காதர் முகைதீனுக்கு 8வது மாதம் 1993ல் வாடகைக்கு விட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாடகைக்கு விட்டதாக அட்வான்ஸ் வாங்கவில்லை. மாதவாடகை பணத்தை செலுத்துவது தொடர்பாக ரிக்கார்டு எதுவும் கிடையாது. காதர்முகைதீன் 9வது மாதம் 2009ல்

காலமானார். தேதி ஞாபகம் இல்லை. காதர் முகைதீனை ஒழுங்காக வாடகை செலுத்தவில்லை என்று அறிவிப்பில் சொல்லியுள்ளேன் அப்போதாவது வெளியேற்ற நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. காதர் முகைதீன் இறப்பிற்கு பின்னர் அவர் பிள்ளைகள் குடியிருந்து வந்தார்கள் என்றால் சரிதான். அவர்கள் பிள்ளைகளிடம் நான் வாடகை ஒப்பந்தம் போட்டதாக சொல்லவில்லை என்றால் வாடகை ஒப்பந்தம் போடவில்லை. நான் அனுப்பிய அறிவிப்பு, பிராது, பிரமாண வாக்குமூலத்தில் 1993லிருந்து 2015 டிசம்பர் 31 வரை மாத வாடகை 1000 ரூபாய் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 1993லிருந்து 2015 வரை 22 ஆண்டுகளுக்கு மாத வாடகை ரூ1000 என்று தான் முடிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்வது போல் மாதவாடகை ரூ1000 என்று வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் ஏ்னறால் சரியல்ல. 2015 ஜனவரி முதல் மாத வாடகை ரூ1500 என்பதற்கு எழுத்து மூலமான ஒப்பந்தம் கிடையாது என்றால் சரிதான். 2018 ஜனவரி முதல் மாத வாடகை ரூ1600 என்பதற்கு எழுத்து மூலமான ஒப்பந்தம் கிடையாது என்றால் சரிதான். வாடகை பாக்கி 40,500 ரூபாய் எத்தனை மாதத்திற்குரிய வாடகை பாக்கி என்றால் கொஞ்சம் கொஞ்சமாக வாடகை தருவார்கள் அதை மொத்த பாக்கிலிருந்து கழித்து 40,500 என்று குறிப்பிட்டுள்ளேன் இது எந்த மாதத்திற்குரியது என்று குறிப்பிட்டு சொல்லஇயலாது. அறிவிப்பு, பிராது, பிரமாண வாக்குமூலத்தில் எந்த மாதங்களுக்கு வாடகை பாக்கி என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு அறிவிப்பிற்கு முன்பு காதர்முகைதீன் வாடகை பாக்கி தரவில்லை என்றும் அவர் பிள்ளைகள் வாடகை பாக்கி தரவில்லை என்ற எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். வாசாஆ1 பத்திரம் எதனால் கேரளா பாடசாலையில் பதிவு செய்தேன் என்றால் அங்கு பத்திர பதிவு செலவு

பாதி தான் ஆகும் என்று என் தாய் மாமா சொன்னதால் முறப்பநாடு சார்பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யாமல் கேரளா பாடசாலையில் பதிவு செய்தேன். மாட்டுதொழு கிரைய பத்திரம் எதனால் கேரளா பாடசாலையில் பதிவு செய்யாமல் முறப்பநாடு சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்தேன் என்றால் அப்போது பத்திரபதிவு செலவு குறைவு என்பது தெரியாது. வாசாஆ1 முத்திரை தாள் என் பெயரில் வாங்கப்பட்டது. வாசாஆ1 பத்திரத்தில் வழக்கு சொத்தும் மற்றும் கேரளா 1 செண்டு இடம் பற்றி சொல்லப்பட்டது. கேரளாவில் 1 செண்டு இடம் காதர் முகைதீனர் என்பவரிடம் அதே தேதியில் 27.5.1993ல் கிரையம் வாங்கினேன். காதர் முகைதீன் எப்போது கிரையம் வாங்கினார் என்பது தெரியாது. அந்த பத்திரம் என்னிடம் தான் உள்ளது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியும். வாசாஆ1 பத்திரத்தில் 1 செண்ட் பற்றி சொல்லியுள்ளதா என்றால் தெரியாது. வாசாஆ1 பத்திரத்தை பார்த்துவிட்டு சாட்சி வாசாஆ1 பத்திரத்தில் 2வது அயிட்ட சொத்து 1செண்ட் காதர் முகைதீன் 22.5.1993ல் கிரையம் வாங்கியதாக சாட்சியம் அளித்தார். அந்த 1 செண்ட் நிலம் 5 நாள் கழித்து வாசாஆ1 பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். முறப்பநாடு சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து வழக்கு சொத்து 10 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது என்றால் சரிதான். பாடசாலை சார்பதிவாளர் அலுவலகம் என்பது கேரளா மாநிலம் திருவனந்தபுரம் மாவட்டம் நெய்யாற்றம்கரை வட்டததில் அமைந்துள்ள பகுதி என்றால் சரிதான். இந்த இடம் செய்துங்கநல்லூரிலிருந்து 150 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது என்றால் சரிதான். 1 செண்ட் கிரைய ஆவணம் மற்றும் வாசாஆ1 கிரைய ஆவணம் தயாரித்தது ஒரே நபர் என்றால் சரிதான். வாசாஆ1 கிரைய ஆவணத்தில் என் தகப்பனார் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார் என்றால் சரிதான். மற்றொரு சாட்சி

மேலப்பாளையத்தை சார்ந்த முகமது காஜாமுகைதீன். இவரை என் மாமா அழைத்து வந்தார். முகமது காஜா முகைதீன் எனக்கும் என் தகப்பனாருக்கும் வேண்டப்பட்டவர் என்றால் சரியல்ல. வாசாஆ1 பத்திரத்தில் காதர் முகைதீன் என்ற கையொப்பத்தை ஒப்பிட்டு பார்க்க நான் தயாராக உள்ளேன். காதர் முகைதீன் பிள்ளைகள் கையொப்பம் மோசடியாக போடப்பட்டள்ளது என்றால் சரியல்ல. வாசாஆ1ல் உள்ள காதர் முகைதீன் மற்றும் அவர் பிள்ளைகள் கையொப்பம் ஆள் மாறாட்டம் செய்து மோசடியாக போடப்பட்டது என்றால் சரியல்ல. வாசாஆ1 பத்திரத்தில் பிதார்ஜிதமாய் என்ற வார்த்தையின் பொருள் தெரியாது. பிதார்ஜிதமாய் என்றால் தகப்பனார் வழியில் கிடைக்க பெற்ற சொத்து என்றால் தெரியாது. சுயார்ஜிதமாய் என்பது சொந்த கிரையம் என்றால் தெரியும்.